**செய்தி வெளியீடு எண்: 04/01/2021** **நாள்: 08.01.2021**

**பத்திரிக்கை செய்தி**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள் இன்று (08.01.2021) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்ட நீட்டிப்பாக விரைவில் துவங்கப்படவுள்ள வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் (9.051 கி.மீ.) வரையிலான வழித்தடத்தில் சுரங்கவழி மற்றும் உயர்நிலைப் பாதைகளில் நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் இறுதிக்கட்ட கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர், அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் எஞ்சியுள்ள பணிகளையும் துரிதமாக முடிக்கும்படி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அப்போது, சோதனை ஓட்டத்தில் இருந்த மெட்ரோ இரயிலில் உள்ள வசதிகளைப் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர், சோதனை ஓட்டம் குறித்த விவரங்களை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., இயக்குநர் (திட்டங்கள்) திரு. ராஜீவ் நாராயண் திவேதி, இயக்குநர் (இயக்கம் & அமைப்புகள்) திரு. ராஜேஷ் சதுர்வேதி, தலைமைப் பொது மேலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**